நவம்பர் மாத சாதாரன கூட்ட மன்றப்பொருள் 2020

<u>**மன்றப்பொருள்:1**</u>

காயல்பட்டணம் நகராட்சி **12.50**கி.மீ பரப்பளவும் **47,840** மக்கள் தொகையும் கொண்டாதாகும். நகராட்சியில் **15,056** வீடுகளும் **832** கடைகளும் உள்ளன. காயல்பட்டணம் நகராட்சியில் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் **2016–2019** ஆண்டுகளில் கழிவறைகள் இல்லாத வீடுகளில் தனிநபர் கழிவறைகள் கட்ட **586** இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, இலக்கு நிர்ணயித்த அனைத்து கழிவறைகளும் 100% கட்டி முடிக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளன. கழிவறை வசதி ஏற்படுத்த இடவசதி இல்லாத குடும்பங்களுக்காக **1** சமுதாய கழிப்பிடமும், பொதுப்பயன்பாட்டிற்காக **1** கழிப்பிடமும் கட்டப்பட்டு பயன்பாட்டில் உள்ளன.

மத்திய அரசின் நகர்புறம் மற்றும் வீட்டு வசதி அமைச்சகத்தின் மூலம் காயல்பட்டணம் நகராட்சி **2019** ஆண்டு திறந்த வெளியில் மலம் கழித்தல் இல்லாத நகராட்சிக்கான தரச்சான்று (ODF Certificate) பெற்றுள்ளது. தற்போது நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் அறிவுரைகள் மற்றும் (MoHUA) அறிவித்த நிபந்தனைகளின்படி ODF+ தரச்சான்று பெறுவதற்காக இந்நகராட்சியில் அனைத்து கழிப்பிடங்களும் முழு சுகாதார (Clean Category) நிலையிலும், **10%** கழிப்பிடங்கள் சிறப்பு நிலையிலும் Clean Category) பேணப்பட்டு வருகின்றன.

இந்நகராட்சியில் தனிநபர் கழிப்பறைகள் கட்டுதல், சமுதாய கழிப்பறைகள் மற்றும் பொது கழிப்பறைகள் கட்டுதல் பணிகள் முழுமை அடைந்து பயன்பாட்டில் உள்ள நிலையில், காயல்பட்டணம் நகராட்சியை திறந்தவெளி கழிப்பிடங்களற்ற நகராட்சியாக (ODF+) அறிவிக்க குடியிருப்பு சங்கங்கள், பள்ளிகள் மற்றும் சுயஉதவிக்குழுக்களிடமிருந்து ஒப்புதல் படிவங்கள் பெறப்பட்டுள்ளன. இந்நகராட்சியை (ODF+) ஆக அறிவிப்பதில் பொதுமக்களின் ஆட்சேபனை ஏதேனும் இருப்பின் **15** நாட்களுக்குள் ஆணையாளர், காயல்பட்டணம் நகராட்சிக்கு அனுப்ப தெரிவிக்க கோரி பார்வை 2ல் காணும் தினகரன் தினசரி நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டது. அதனை தொடர்ந்து எந்த வித ஆட்சேபனையும் பொது மக்களிடமிருந்து பெறப்படாத நிலையில் ODF+ க்கு விண்ணப்பிக்க பார்வை 3ல் காணும் நகர மன்ற தீர்மான எண் **2071** நாள் **30.11.2020** ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. எனவே இந்நகராட்சியை திறந்கவெளி கழிப்பிடங்களற்ற (ODF+) தரச்சான்று பெற்ற நகராட்சியாக பிரகடனப்படுத்த முன்மொழிவுகள் இத்துடன் இணைத்து மேலனுப்பப்படுகிறது என்பதைப் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

அலுவலக குறிப்பு–
அனுமதி வழங்கலாம்.

ந.கஎண். 22/2019/எச்

**தீர்மான எண் 2071 அனுமதிக்கப்பட்டது.**

மன்றப்பொருள்:2

நகராட்சிகளின் மண்டல நிர்வாக இயக்குநர், திருநெல்வேலி அவர்களின் உதரவின்படி, தூய்மை இந்தியா திட்டத்தின்கீழ் களப்பணியாளர்களை நியமனம் செய்திட ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டதற்கு ஐடியா பிராண்ட் சொல்யூசன், சென்னை என்ற நிறுவனத்திற்கு வழங்கப்படவேண்டிய விளம்பர தொகையில் இந்நகராட்சியின் பங்கு தொகையாக ரூ.4453/– (நாலாயிரத்து நாநூற்றி ஐம்பத்து மூன்று மட்டும்) ஆணையாளர், கடையநல்லூர் நகராட்சி அவர்களுக்கு காசோலையாக வழங்கிடவும் , இந்த தொகையினை பொது நிதியில் இருந்தசெலவு செய்திடவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு–
அனுமதி வழங்கலாம்.
ந.கஎண். 785/2013/எச்.1
**தீர்மான எண் 2072 அனுமதிக்கப்பட்டது.**

**மன்றப்பொருள்: 3**

காயல்பட்டணம் நகராட்சிபொது சுகாதார பிரிவு , தூய்மை இந்தியா இயக்கத்தின் சார்பாக SBM 2.0 நிதி பெறுவதற்கு Star Rating for garbage city என சான்று பெற வேண்டி உள்ளதால் , இது தொடர்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளவும் சுயஉதவிக்குழு , குடியிருப்போர் நலச்சங்கம், பள்ளிகள், மற்றும் Bulk waste gentrator ஆகியோரின் Self declaration சான்று பெற நடவடிக்கை மேற்கொள்ளவும், பொதுமக்களின் ஆட்சேபனை கேட்டு தினசரி நாளிதழில் அறிவிப்பு செய்யவும், அதன் தொடர்பான செலவினங்களை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் நகர்மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும்,

அலுவலக குறிப்பு-
அனுமதிக்கலாம்
ந.க.எண். எச்.1/22/2019
**தீர்மான எண் 2073 அனுமதிக்கப்பட்டது.**

**மன்றப்பொருள் 4**

காயல்பட்டணம் நகராட்சி பொது சுகாதார பிரிவு, தூய்மை இந்தியா இயக்கத்தால் சார்பாக SBM 2.0 நிதி பெறுவதற்கு ODF + Status சான்று பெற வேண்டி உள்ளதால், குழு தொடர்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளவும், சுகதார குழு, குடியிருப்போர் நலச்சங்கம், பள்ளிகள் உள்ளிட்டவைகள் Self declaration சான்று பெற நடவடிக்கை மேற்கொள்ளவும், பொதுமக்கள் ஆட்சேபனை கேட்டு தினசரி நாளிதழில் அறிவிப்பு செய்யவும், அதன் தொடர்பான செலவினங்களை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் நகர்மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும்.

அலுவலக குறிப்பு-

அனுமதிக்கலாம்
ந.க.எண். எச்.1/22/2019
**தீர்மான எண் 2074 அனுமதிக்கப்பட்டது.**

**<u>மன்ற பொருள் 5</u>**

காயல்பட்டணம் நகராட்சியில் பயன்பாட்டில் உள்ள பொது சுகாதார வாகனங்களின் அவசர அவசியம் கருதி பழுது பார்த்த வகைக்கு (16.10.2020 மற்றும் 03.11.2020 பட்டியல் படி) கீழ்க்கண்ட விவரப்படி இந்நகராட்சி ஓடுநர், திரு. வெ.ராதாகிருஷ்ணன் மற்றும் சுகாதார அய்வாளர் பரிந்தரை படி, சில்லறை செலவுகள் மேற்கொண்ட வகைக்கு பொது நிதியில் இருந்து தொகை வழங்க மன்ற அனுமதிக்கு,

| வ.எண் | வாகனங்களின் எண். | தொகை ரூ. |
|---|---|---|
| 1 | TN 69 D0054 பொது சுகாதார வாகனம் | 300/– |
| 2 | TN 69 S 0146 பொது சுகாதார வாகனம் | 580/– |
| 3 | TN 69 AY 0603 பொது சுகாதார வாகனம் | 2900/– |
| 4 | TN 92 C 6881 அலுவலக வாகனம் | 100/– |
| 5 | TN 92 D 0019 | 600/– |
| | மொத்தம் | 4480/– |

<u>அலுவலக குறிப்பு–</u>

மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண். 956/2019/அ4

**தீர்மான எண் 2075 அனுமதிக்கப்பட்டது.**

**<u>மன்ற பொருள். 6</u>**

காயல்பட்டணம் நகராட்சி 2011 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின் படி 40588 ஆகும். மொத்த வார்டுகளின் எண்ணிக்கை 18 இதில் 78 தெருக்களும் கொண்டது. நகராட்சியின் மொத்த பரப்பு 12.5ச.கி.மீ சுற்றளவினை கொண்டதாகவும் உள்ளது. இந்நகராட்சியில் பேரூராட்சி நிர்வாகத்தின் கீழ் இருந்த சமயம் இந்நகராசிக்கு 33 துப்புரவு பணியாளர்கள் அனுமதிக்கப்பட்டுள்ளது. அரசாணை எண் 301 நகராட்சிகள் நிர்வாகம் குடிநீர் வழுங்கல் துறை (தேர்தல்) நாள் 24.08.2004ன்படி இந்நகராட்சி மூன்றாம் நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டது. அரசாணை எண் 154 நகராட்சிகள் மற்றும் குடிநீர் வழுங்கல் துறை (நநிவ) நாள் 09.08.2010 படி இரண்டாம் நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டது. இந்நகராட்சி வளர்ந்து வரும் நகராட்சியாக முன்னேறிக்கொண்டிருப்பதால் நாள் ஒன்றுக்கு சேகரமாகும் திடக் கழிவுகளை மக்கும் கழிவுகள் மற்றும் மக்காத கழிவுகள் என உரக்கிடங்கிற்கு கொண்டு செல்லும் பணிக்கு போதிய பணியாளர்கள் இல்லை. இந்நகராட்சியில் 15056 வீடுகளும் வரிவிதிப்பு கட்டிடங்கள் 15888 உள்ளது. மேலும் இந்நகராட்சியானது அருகே சுற்றுலா தளங்களுக்கு செல்லும் பிரதான நகரமாக விளங்குகின்றது. எனவே இந்நகராட்சிக்கு வந்து செல்லும் மக்கள் தொகை அதிகமான அளவில் உள்ளது. எனவே அரசாணை (நிலை) எண் 101 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழுங்கல் துறை நாள் 30.04.1997ன் படி வழங்கப்பட்டுள்ள அளவுகோளின் படி இந்நகராட்சிக்கு தேவையான பணியாளர்கள்

பின்வருமாறு

| | |
|---|---|
| 1) மொத்த வீடுகளின் எண்ணிக்கை | = 15056 / 250=60 x 3=180(து.ப) |
| 2) வாகனங்கள் | |
| பெரிய லாரி 3x4(து.ப) | = 12 |
| மினி ஆட்டோ 5x2(து.ப) | =10 |
| 3) உரக்கிடங்கு 4.5 ஏக்கர் 2 (து.ப) | = 2 |
| 4) பேருந்து நிலையம் கழிப்பிடம் (து.ப) | = 2 |
| 5) பேருந்து நிலையம் (து.ப) | = 2 |
| தேவைப்படும் மொத்த பணியாளர்கள் | =208 |
| தற்போது இந்நகராட்சியில் தோற்றுவிக்கப்பட்டுள்ள | |
| பணியிடங்கள் | = 33 |
| மீதமுள்ள தேவைப்படும் கூடுதல் பணியிடங்கள் | = 175 |

6) சென்னை நகராட்சி ஆணையர் அவர்களின் உத்திரவு

R.O.C.No.4235/P3/2018நாள்.7/2/2018ன்படி

இந்நகராட்சிக்கு 2 நுண்ணுயிர் உரம் தயாரிப்பு மையம்

(MCC)ஒன்றுக்கு 8 பணியாளர்கள் வீதம் மொத்தம் 16

| | |
|---|---|
| பணியாளர்கள் | = 16 |
| தேவைப்படும் மொத்த பணியாளர்கள் | = 191 |

சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் உத்தரவு R.O.C.No.38162-6/P3/2015 நாள்.22.01.2015ன் படி 139 பணியாளர்கள் ஒப்பந்த அடிப்படையில் மூன்று ஆண்டுகளுக்கு பணியமர்த்திக்கொள்ள உத்திரவிடப்பட்டுள்ளது. மேற்படி உத்திரவு ஆணை 21.01.2018 முடிவடைவதால் 139 பணியாளர்களுக்கான ஆணையினை நீடித்து வழங்கவும் கூடுதலாக தேவைப்படும் 52 பணியிடங்கள் சேர்த்து 191 பணியாளர்கள் ஒப்பந்த அடிப்படையில் எடுத்துக்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களுக்கு கருத்துரு சமர்ப்பிக்கவும் மேலும் இந்நகராட்சியில் தணிக்கை முடிவுற்ற 2019–2020 ஆம் நிதி ஆண்டின் மொத்த வருவாய் ரூ.10,20,64,499 ஆகும். இதில் பணியாளர்களின் ஊதியம் மற்றும் ஓய்வூதிய செலவினம் 8,16,32,565 ஆகும். எனவே கூடுதலாக 195 துப்புரவு பணியாளர் ஒப்பந்த அடிப்படையில் பணிபுரிய மொத்த ஊதிய செலவினம் ரூ.2,42,03,520/– ஆகும் என்ற விபரம் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு–</u>

மன்றம் அனுமதி வழங்கலாம்.
ந.க.எண். 781/2019/அ4

**தீர்மான எண் 2076 அனுமதிக்கப்பட்டது.**

<u>மன்றப்பொருள் 7</u>

காயல்பட்டணம் நகராட்சியின் 2019-20 ம் ஆண்டிற்கு தயார் செய்யப்பட்ட உத்தேச வரவு செலவு திட்ட அறிக்கை நகர்மன்றததின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு–</u>

மன்றம் பார்வையிட்டு அங்கீகரிக்கலாம்.

**தீர்மான எண் 2077 அனுமதிக்கப்பட்டது.**

தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்
காயல்பட்டணம் நகராட்சி